**தலைப்பு 299 – இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 299 – இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூலை 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 3643 வியாபார சின்னங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பதிவு செய்தலை, விண்ணபங்கள் கிடைத்த ஆண்டொழுங்கில் வகைப்படுத்தப்பட்டு இருக்காததால் ஆண்டினுள் கிடைக்கும் விண்ணப்பங்கள் அவ் ஆண்டினுள்ளே பதிவு செய்யப்படுவதில்லை என செயலாற்றுகை அறிக்கையூடாக பிரதிபலித்திருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் செயலாற்றுகை சமரப்பிக்கப்படும் போது ஒவ்வொரு ஆண்டும் மேற்கொண்ட செயல்களிற்காக முன்னுரிமை வழங்கி தகவல்களை சமர்பித்ததுடன், அந்த மேற்கொண்ட செயல்கள் விண்ணப்பம் கிடைத்த ஆண்டொழுங்கில் வகைப்படுத்த தேவையில்லாததால் அவ்வாறு வகைப்படுத்த வில்லையென. அடுத்த ஆண்டு முதல் அத் தகவல்களையும் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக. | ஒவ்வொரு ஆண்டினதும் வியாபார சின்னம் பதிவு செய்தல்களின் முன்னேற்றத்தை காட்டும் போது அப் பதிவு செய்தல்களை, விண்ணபங்கள் கிடைத்த ஆண்டின் பிரகாரம் வகைப்படுத்தி காட்ட வேண்டும். |

### 2.2 முகாமைத்துவ பழவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்திடமிருந்து சர்வர் | Telecom Cloud Server தொகுதிக்கு அல்லது வேறு பொருத்தமான | கால தாமதமின்றி செலுத்திய ரூபா 32.5 மில்லியன் தொகை |

| | | |
|---|---|---|
| இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய 2016 திசெம்பர் 31 திகதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இருந்ததுடன் சேவை முறைகளிற்கு செலுத்த வேண்டிய ரூபா 7.5 மில்லியன் உள்ளடங்களாக உடன்பட்ட தொகையான ரூபா 32.5 மில்லியன் அத்திகதியே செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அவ் ஒப்பந்தத்தை ICTA நிறுவனம் மீறியிருந்ததுடன் 2020 பெப்ரவரி 20 திகதிய இலக்கம் CP/20/0139/215/009 கொண்ட அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் மீண்டும் உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுத்திருந்த போதும் அவ்வாறு உடன்படிக்கை செய்திருக்கவில்லை. பின்னர் 2022 திசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் பிரகாரம் Cloud Server (LGS) தொகுதியை மென்பொருளுடன் வழங்க உடன்பட்டிருந்த போதும், அது காணப்படும் தொகுதிக்கு பொருந்தாததால் வேறு பொருத்தமான மாற்று வழிக்கு வருவது பொருத்தமென 2023 மார்ச் 27 திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் ICTA நிறுவனம் அறிவித்திருந்தது. | மாற்று வழியை அனுகுமாறு தேவையான தொழிநுட்ப உதவியை இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப முகவர் (ICTA) நிறுவனத்திடமிருந்து பெற்றத்தர முடியுமெனவும் ICTA மூலம் அறிவித்து உள்ளதுடன், அந் நிறுவனத்திற்கு செலுத்திய ரூபா 32.5 மில்லியன் தொகையை மீள் செலுத்த தேவையான நடவடிக்கை எடுக்க, புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்கு தேவையான ஆவணங்களின் பிரதிகளை அனுப்பியதாக. | பதிலீடு செயய்யப்படும் வகையில் Server தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். |

**3. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இனங்கண்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் முன்னேற்றத்தை அளவிட அடிப்படை ஆண்டொன்று மற்றும் அவ் ஆண்டில் நிலவிய நிலைமையை அடிப்படையான தரவுகளாக இனங்காணலும் இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய திருப்பு முனைகளை மற்றும் முன்னேற்றத்தை அளவிடும் சுட்டிகளை தெளிவாக இனங்காணலும் செய்யப்பட வேண்டிய போதும் அவ்வாறு மேற்கொள்ளாது மீளாய்வாண்டில் அடைந்து கொண்ட முன்னேற்றம் 0 சதவீதம், 65 சதவீதம் மற்றும் 75 | மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் அடைந்திருந்த முன்னேற்றம் இங்கு காட்டபப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் வருடாந்த முன்னேற்ற அறிக்கை ஊடாக அதன் சரியான தன்மையை உறுதிபடுத்தி கொள்ள முடியும் எனவும் அடிப்படை ஆண்டிற்கு ஒப்பாக முன்னேற்றத்தை சமர்ப்பிக்க எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுப்பதாக. | இனங்கண்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் முன்னேற்றத்தை அளவிட அடிப்படை ஆண்டொன்று மற்றும் அவ் ஆண்டில் நிலவிய நிலைமையை அடிப்படை தரவுகளாக இனங்காணவதும் இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய திருப்பு முனைகளை மற்றும் |

| | | |
|---|---|---|
| சதவீதமாக வீதமட்டங்கள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதும் அம் முன்னேற்ற பெறுமானங்களின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | | முன்னேற்றத்தை அறவிடும் சுட்டிகளை தெளிவாக இனங்காணலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4 நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு பதவி 4 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டதுடன், 2022 ஒக்தோபர் 17 முதல் கடமை மேவுதல் அடிப்படையில் அலுவலர் ஒருவரை நியமிக்கப்பட்டிருந்தனர். | உள்ளக கணக்காய்வாளர் வெற்றிடத்திற்கு அலுவலர் ஒருவரை இணைத்துக் கொள்ள அவ்வப் போது அமைச்சிற்கு விடுத்த கோரிக்கை பிரகாரம் 2022 ஒக்டோபர் மாதம் முதல் கடமை காப்பிற்காக அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவ் அலுவலரின் கோரிக்கையின் மீது 2023 மாரச் முதல் அக் கடமையிலிருந்து விடுவித்து மீண்டும் 2023 மே முதல் கடமை காப்பிற்காக அலுவலர் ஒருவரை நியமித்ததாக. | உள்ளக கணக்காய்வு, நிறுவகத்தின் செயற்பாட்டு செயல்முறையை மேம்படுத்துதல், அதன் செயலாற்றலை அதிகரித்திற்கொள்ள உதவும் செயல்முறை ஒன்றாகையால் அதனை செயற்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார பேடன்ட் பரிசோதகர் 10 பதவிகளில் 9 உமே 6 ஆண்டுகளிற்கு அதிக காலமாக வெற்றிடமாக உள்ளதுடன் இது திணைக்கள ரீதியான பதவியான போதும், அந்த பதவிக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துள்ள போதும் பலதரப்பட்ட காரணங்களினால் அது ஆக்கபூர்வமாக இருக்கவில்லை. | சார்ந்த சேவையின் புதிய ஆட்சேர்ப்பை நிறுத்தி அதற்கு பதிலாக 2015 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை அவ்வப் போது விஞ்ஞான பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியதாக. அவ் அலுவலர்களுக்கு பேடன்ட் பரிசோதனை பற்றிய | அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதால் பெற்றுக் கொடுக்கும் பயிற்சியை ஆக்கபூர்வமாக்கிக் கொள்ள உத்தேச ஆட்சேர்ப்பை தாமதிக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | பயிற்சியை வழங்கிய போதும் வருடாந்த இடமாற்ற முறையின் கீழ் இடமாற்றம் பெறுவதால் வினைத்திறனான தொடர்ச்சியான சேவையை பெற்றுக் கொள்ள முடியாதென. அதனால் அச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிடமிருந்து இந்த பதவிக்கு ஆட்சேர்க்க தேவையான நடவடிக்கை எடுத்து பரீட்சை அறவித்தலை பரீட்சை திணைக்களத்திற்கு சமர்பித்துள்ளதாக. | |
| (ஆ) | புலமைச் சொத்து அலுவலர் பதவிகள் 21 அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும், பிற்காலத்தில் பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட விதத்திலாக 10 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.<br>தற்போதளவில் அதன் 05 பதவிகள் இறத்தாகியுள்ளது. அந்த நிலைமை வியாபாரக் சின்னப் பிரிவின் செயலாற்றுகை குறைவதற்கு காரணமாக இருந்தது. | அங்கீகார பதவியணியினரில் 21 புலமைச் சொத்து அலுவலர் பதவிகள் காணப்பட்ட போதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2018 ஆண்டில் அந்த பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட விதத்திலாக 10 பதவிகளை அங்கீகரித்துள்ளது.<br>அலுவலர்கள் ஓய்வு பெறல், கேட்டு விழகல் போன்ற காரணங்களால் தற்போதளவில் 05 அலுவலர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இந்த அலுவலகத்தில் அலுவலர் பற்றாக்குறை உற்பத்தித் திறனிற்கு காரணமாவதால் அப் பதவிகளை ‘‘வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட விதத்திலாக’’ என்பதை அகற்றி, முன்னர் அங்கீகரித்திருந்த புலமைச் சொத்து அலுவலர் பதவியை மீண்டும் அங்கீகார ஆளணியினுள் உட்படுத்தித் தருமாறு 2023 மார்ச் மாதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக. | வியாபாரக் சின்னப் பிரிவின் செயலாற்றுகையை அதிகரிக்க செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |